205-100121

205

I

Total No. of Questions - 7

Total No. of Printed Pages - 3

Regd. No.

Part - II

TAMIL - Paper - II

(Second Language)

Time : 3 Hours **Max. Marks : 100**

மொழிப்பாடம் பகுதி II-தமிழ்

அறிவுரைகள் :

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி - II

சரியான விடைகளை எழுதவும்.

I. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. 5×5=25

1. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்? ஏன்
2. வினைமேற்சென்ற தலைவனிடம் தூது வந்த பாணன் தெரிவித்த செய்தி யாது?
3. பொறையுடைமை என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
4. வினைத்திட்பம் என்னும் தலைப்பில் திருவள்ளுவர் கூறியுள்ளன யாவை?
5. மருண் மாலைப் போதில் கண்ணகி இணைந்து ஏங்கி உரைத்தனவும், வலனைக் கண்டபொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் இருபது வரிகளில் வரைக.

6. சீதையை அனுமன் கண்டுவந்து கூறிய செய்திகளை இருபது வரிகளில் மிகாது எழுதுக.

7. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை?

8. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?

II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2×3=6

1. இசைத்தமிழ் என்பது யாது? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை?

2. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக.

3. மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதனைப் பாவாணர் கூறுமாறு யாங்ஙனம்?

4. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. 4×6=24

1. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றை தொகுத்து வரைக.

2. நம் தமிழ்மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. தமிழர்க்கு ஆவொடு தொன்றுதொட்ட தொடர்பு உண்டு என்பதனைப் பாவாணர் கருத்துகள் வழியே நிறுவுக.

4. வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச்சாரம் கூறுவன யாவை?

5. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ.உரைக்கும் எதிர்காலக் கனவு யாது?

6. கோயிற் கட்டடக் கலைப் பற்றி விளக்கி வரைக.

IV. எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக 2×5=10

1. "நல்லது செய்த லாற்றீராயினும்"

2. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்; அப்பொருள்"

3. "இறுதியில் உயிர்தந்தீயும் மருந்தொத்த தனைய தெத்தாய்"

4. "உரைநடையின் சிக்கனந்தான் கவிதை; ஓங்கும்"

V. **எவையேனும் இரண்டிற்கு இருபக்க அளவில் கட்டுரை வடிவில் விடை தருக.** 2×10=20

1. பால்வண்ணம் பிள்ளை.
2. சட்டை.
3. மகன்.
4. கிழிசல்.
5. மண்.

VI. **மண்ஏதேனும் ஒன்றிற்கு இருபக்க அளவில் கட்டுரை வடிவில் விடை தருக:** 10×1=10

1. மாணவ பருவத்தில் சமூக சேவையின் அவசியம்.
2. எனக்கு பிடித்த தேசிய தலைவர்.
3. கணினி அறிவியலின் பயன்கள்.

VII. **தமிழில் மொழி பெயர்க்க:** 1×5=5

Dr. Martin Luther King was one of the great man of the world. India honoured him with the Nehru Peace Prize. He fought for the civil rights of the black people in South Africa. He followed the teachings of Jesus Christ and ideas of Mahatma Gandhi.

205-100121

205-100121



205-100121

205-100121

205-100121

